செ.வெ.எண் -18 நாள்:11.01.2018

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மது பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு தொடர்பான பணிகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட அளவிலான குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மது பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டதில், மாணவர்கள் மற்றும் பொதுமக்களைக்கொண்டு விழிப்புணர்வு பேரணி ஏற்படுத்துதல், கட்டுரைப்போட்டி, மனித சங்கிலி, மக்கள் கூடும் இடங்களில் மது பழக்கத்தினால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய விளம்பர பலகைகள் அமைத்தல், துண்டு பிரசுரங்கள் வெளியிடுதல், இவ்விழிப்புணர்வு பணிகளில் தன்னார்வலர்கள் மற்றும் மாணவர்கள் மூலமாக விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்வது குறித்து குழு அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் கலந்தாய்வு மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.அபிநவ்குமார், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், கோட்டாட்சியர்கள் மு.மோகனராஜன் (அரியலூர்), ப.டினாகுமாரி (உடையார்பாளையம்), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.எ.புகழேந்தி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வு பிரிவு) சண்முகநாதன் மற்றும் குழு உறுப்பினர்கள், கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.